# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,929 — 1970 ඔක්තෝබර් 23 වැනි සිකුරාදා — 1970.10.23**

**14,929 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 317 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 318 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 318 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40அ, 40ஆ ஆகிய பிரிவுகளின் கீழ் குருநாகல் மாவட்டத்திலுள்ள நிக்கவெரட்டியக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் நிறைவேற்றப்பட்ட, பின்வரும் தீர்மானம் அக்கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் நிதியமைச்சரின் இணக்கத்துடன் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்பது பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பீ. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரம்பர் மீ 9 ந் உ.

### தீர்மானம்

இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தில் 1971 ஆம் ஆண்டிலிருந்து சொல்லப்பட்ட பிரதேசத்துக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், காணிகள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு மூன்று வீதமானதும் ஒவ்வொரு ஆண்டின் மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 திசெம்பர் 31 ஆகிய திகதிகளிலன்று அல்லது அவற்றுக்கு முன்னர் நான்கு தவணைகளில் சமதொகைகளில் செலுத்தப்படற்பாலதுமான தண்ணீர் வரியொன்றினை (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 (அ), 40 (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் விதித்து அறவிடுதற்கு குருநாகல் மாவட்டத்திலுள்ள நிக்கவெரட்டியக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை இத்தால் தீர்மானிக்கிறது.

### அட்டவணை

தண்ணீர் விநியோக நிலைக்கம்பங்கள் இடம்பெற்றுள்ள தண்ணீர் வழங்கல் திட்டத்தின் குழாய்களுக்கு இரு மருங்கிலும் 250 அடி தூரத்துக்குள் உள்ள பிரதேசம்.

10–924—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவ பலங்களைக் கொண்டு, பொது நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அராலிக் கிராமப் பிரதேசத்தில் அப்பிரிவின் கீழ் ஒரு நிலவரியை விதித்து அறவிடுவதற்கு அக்கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபைக்கு இவ்வறிவித்தல் வாயிலாக அதிகாரமளிக்கின்றேன்.

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 10 ந் வ.

10–905—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 (2) ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீ. ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 10 ந் வ.

### கட்டளை

கொழும்பு மாவட்டத்திலுள்ள கப்பிட்டிகம் கோறளை, யட்டிகஹ பற்றிலுள்ள கொட்டதெனியக்கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசமானது கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் கீழ் ஏக்கர் வரியை விதித்து அறவிடும் நோக்கத்துக்காக விசேட பிரதேசமொன்முக அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் மூன்றுவது காப்புரையின் கீழ் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

10–906—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

# துணை விதிகள்

## பொல்காவலைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின்129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின் கீழ் பொல்காவலைப் பட்டின சபையாலாக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்கநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பி. எச். டி. சொய்சா,
மேலதிக நிரந்தரச் செயலாளர்.
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 10 ந் வ.

### துணைவிதி

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின்129 (ஆ) ம் பிரிவின் கீழ் அறவிடப்பட்டதும் 22.5.1970 ன் 14907 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1970 மே 7 ந் திகதிய அறிவித்தலில்குறிப்பிடப்பட்டுள்ளதுமான விசேட மலகூடவரியிலிருந்து பொல்காவலைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள்ளிருக்கும் நெல்வயலெவ்வொன்றும் 1970 ஆம் ஆண்டுக்கு விலக்களிக்கப்படல்வேண்டும்.

10–912—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

---

# நானுவித அறிவித்தல்கள்

## ஏருவூர் பட்டிப சபை

### கசாப்புக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272 ன் 7 ம் பிரிவிற்தாற்பரியப்படி இதன் கீழ் காணும் அட்டவணையிற் காணப்படும் பேர் வழிக்காரரிடமிருந்து 1970 ம் ஆண்டிற்கு கசாப்புத் தொழில்நடாத்த அனுமதிக்கும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பட்டின சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பினுல், மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

எம். ஏ. சி. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டின சபை, ஏருவூர்.

பட்டின சபை அலுவலகம்,
ஏருவூர்,
1970 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 11 ந் வ.

### அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயர் விலாசம் | வியாபாரம் செய்யவிருக்கும் இடத்தின் பெயர் விலாசம் |
|---|---|
| யா. அலிமுகம்மது, 3ம் குறிச்சி, ஏருவூர் | 24 ஏ இலக்கக் கடை, புதிய சந்தைஏருவூர். |

10–875—23.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,929

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்,** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒற்ரோபர் | .. | 2.10.70 | வெள்ளி | .. | 25. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 9.10.70 | வெள்ளி | .. | 2.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 16.10.70 | வெள்ளி | .. | 9.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 23.10.70 | வெள்ளி | .. | 16.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 30.10.70 | வெள்ளி | .. | 23.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | .. | 5.11.70 | வியாழன் | .. | 30.10.70 | வெள்ளி | .. | பி.ப | 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ம.ப | 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ம.ப | 12 00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ம.ப. | 12.00 |
| **திசெம்பர்** | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ம.ப | 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ம.ப | 12.00 |
| | | 18.12.70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 24.12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3 30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2-ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிக்கப்பெற்றது.